**17.09.2014**

**Pastoral letter No/GR/ 18/ 2014**

**ஆயர் திருமுகம்**

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

இவ்வாண்டு நம் சீரோ மலபார் திருச்சபையைப் பொறுத்தமட்டில் மற்றுமொரு மகத்தான ஆண்டாகும். புனித அல்போன்சாம்மாவைத் தொடர்ந்து, சாவறா அடிகளார் மற்றும் எவுப்பிராசியம்மா ஆகியோர் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் வருகிற நவம்பர் மாதம் 13-ம் நாள் புனிதர்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ளார்கள்.

இம்மகிழ்வான தருணத்தையும், அவர் தம் ஆசியையும் நமதாக்கும் முன், அவர்கள் கடந்து வந்த பாதையையும், வாழ்க்கைப் பதிவுகளையும் நாம் தியானிப்பது, விண்ணக வாழ்வை நோக்கிய நம் இவ்வுலக பயணத்தில் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

## புனித சாவறா குரியாக்கோஸ் எலியாஸ் அடிகள்

1805-ல் கேரளாவில் ஆலப்புழா மாவட்டத்தில் கைனகிரி என்ற ஊரில் பிறந்து 1829-ல் கேரளாவில் சுரியானி துறவற சபையில் சேர்ந்து மறைமாவட்டக் குருவாகி, இறைப்பணியை பெரும்பணியாகக் கொண்ட சாவறா குரியாகோஸ் எலியாஸ் அடிகள் இக்குடும்ப ஆண்டில் புனிதராக உயர்த்தப் பெறுவது இறைவனின் பெருஞ்சித்தமாய் உள்ளது. கேரள வரலாற்றில் 19-ம் நூற்றாண்டில் உதய சூரியனைப் போல சபையின் புதிய ஆன்மிக உயர்வுக்கு சாவறா அடிகளார் ஒளிவீசினார்.

திருச்சபையிலுள்ள எல்லா ஆன்மீக உணர்வுகளும் தொடங்க வேண்டியது குடும்பங்களில் தான் என்று சாவறா தந்தை முதலில் சான்று பகர்ந்தார். இந்த ஆன்மீக உணர்வு சாவறா தந்தைக்கு தோன்றியது, அவருடைய அன்னையின் வழியாகத் தான் என அவர் எழுதிய புத்தகங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அன்னை தனது மடியில் இருத்தி, சிலுவை வரைந்து, ஜெபங்களைச் சொல்லுவதற்குக் கற்றுக் கொடுத்து, திருக்குடும்பத்துக்குத் தங்களை ஒப்புக் கொடுத்து புனிதத்தில் வளர உதவினார். பிள்ளைகளுக்கு தாய் தந்தையர் உலக ஆடம்பரங்களை பற்றி எப்போதும் கூறிக்கொண்டே இருக்காமல் ஆனமீக காரியங்களை பற்றி சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று சாவறா அடிகளார் கூறியுள்ளார்.

ஒரு குடும்பத்தில் உள்ள தாய் தந்தையரும், பிள்ளைகளும், சகோதரர்களும் புனித வாழ்வு வாழச் செய்ய வேண்டிய நற்செயல்கள் எவையென சாவறா அடிகள் தான் எழுதிய குடும்பச் சட்டம் என்ற நூலில் சுட்டிக் காட்டியுள்ளார்.

குடும்பம் என்பது இரத்தத்தாலும், அன்பினாலும் பிணைக்கப்பட்டு, பெற்றோர்களோடு அன்பும், ஆதரவும் உள்ளவராக இருந்து, கடவுளோடும் மனிதர்களோடும் சேர்ந்து ஒவ்வொருவரின் வாழ்க்கை வழிகளுக்கு இறையாசியைப் பெற வேண்டிக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம் ஆகும். இக்குடும்பம் விண்ணுலகிற்கு ஒப்பாகும் என்று சாவறா அடிகளார் கூறுகிறார். அந்த நல்ல பண்புகள் இல்லாத குடும்பங்கள் நரகம் ஆகும். குடும்பங்களை சொர்க்கமாக மாற்றுவோம் என்ற உறுதிப்பாட்டைத் தான் ஒவ்வொரு மணமக்களும் தங்கள் திருமணத்தின்போது எடுக்கிறார்கள்.

குடும்ப வாழ்வின் அடித்தளத்திற்கும் மறுமலர்ச்சிக்கும் நெறிமுறைகளை உருவாக்கி குடும்ப நல்லொழுக்க தியானம் நடத்தி, பெற்றோரும் பிள்ளைகளும் நல் உறவில் வளர சாவறா தந்தை முயற்சி செய்தார். கூடி ஜெபிக்கும் குடும்பம் கூடி வாழும் என்று புரிந்து கொண்டு குடும்ப ஜெபத்திற்கு முன்னுரிமை கொடுக்க ஆர்வமூட்டினார்.

குடும்பத்தின் நிலையான செல்வம் குழந்தைகள் தான் என்று போதித்த சாவறா தந்தை பிள்ளைகளுக்காய் நாம் தேடி வைக்கும் செல்வம் நல்வழிகாட்டும் புத்தகங்களாகும் என்று நினைவூட்டினார். பெண்களுக்கு உரிமைகள் மறுக்கப்பட்ட அக்காலத்தில் அவர்களுக்கு சிறுதொழில்களான ஜெபமாலை கோர்த்தல், துணி நெய்தல் போன்ற கைவினை வேலைப்பாடுகளை சாவறா தந்தை கற்றுக் கொடுத்து பெண்களின் உரிமைகளை நிலைநாட்டினார்.

எல்லா நாட்களிலும் குடும்பத்தில் ஒருவராவது திருப்பலியில் பங்கெடுக்க வேண்டும, ஒவ்வொரு வாரமும் குடும்பத்தார் அனைவரும் பாவ சங்கீர்த்தனம் செய்து திவ்யநற்கருணை உட்கொள்ள வேண்டும், கடன் திருநாள்களை பரிசுத்தமாய் அனுசரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

சமாதானமும் நம்பிக்கையும் இல்லாமலும், இறை வேலை செய்வதிலும் நித்திய விண்ணுலக வாழ்க்கையைத் தேடுவதிலும் ஆர்வம் இல்லாமலும் இருப்பவர்கள் குடும்பத்தில் வாழ்வது மிகப்பெரிய ஆபத்தானதாகும் என்பார்.

இவ்வாறு சாவறா அடிகளார் ஏராளமான அறிவுரைகளைத் தந்துள்ளார். அவற்றை நாம் பின்பற்றி நடந்தால் குடும்பங்கள் சொர்க்கமாகும். இக்குடும்ப வருடத்தில் நாம் சாவறா அடிகளாரை நினைவில் வைத்து நம் குடும்பங்களை சொர்க்கமாக்குவோம். நல்ல கிறிஸ்தவ குடும்பமாக நம் குடும்பம் மாற புனித சாவறா அடிகள் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசுவாராக.

## புனித எவுப்பிராசியம்மா

இயற்கையின் அழகை தனதாக்கிக் கொண்ட கேரள மாநிலத்தின் திருச்சூர் மாவட்டத்தில், காட்டூர் கிராமத்தில் செல்வச் செழுமையுடன் வாழ்ந்து வந்த அந்தோணி - குஞ்ஞேத்தி இணையருக்கு மகளாக 1877 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 17 -ம் நாள் ரோசா என்ற எவுப்பிராசியா பிறந்தார். இறை நம்பிக்கையிலும், இறை வேண்டலிலும் நிலைத்திருந்த பெற்றோரின் எடுத்துக்காட்டான வாழ்ககையினாலும், தனது வாழ்வின் உட்பொருளை உணர்ந்த ரோசா தனது 9-ம் வயதில் இறைவனுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். ரோசாவின் உடல், உள வளர்ச்சியுடன் அர்ப்பணத்தின் வேர்களும் அவரது இதயத் துடிப்புகளில் வேரூன்றிக் கொண்டேயிருந்தன. தந்தையின் இதய ஏக்கங்கள் இவற்றிற்கு எல்லாம் வேறுபட்டவை என்பதை அவள் உணர்ந்திருந்தாலும், பல தடைகளையும் தாண்டி கூனம்மாவு எனும் இடத்தில் சாவரா அடிகள் முதலில் தொடங்கிய கன்னியர் இல்லத்தில் சேர்க்கப்பட்டு திருச்சூர் ஆயர் ஜாண் மேனாச்சேரி அவர்களால் இயேசுவின் திரு இருதயத்தின் எவுப்பிராசியா என்னும் பெயரில் 1897 மே மாதம் 10 -ம் நாள் அருட்சகோதரியாக திருநிலைப்படுத்தப்பட்டார். ‘‘செபிக்கின்ற அம்மா’’, ‘‘நடமாடும் நற்கருணை பேழை’’, ‘‘நற்கருணை பேழையின் காவல்காரி’’ என்கின்ற பெயர்களால் அனைவராலும் அழைக்கப்பட்டார். இவர் 1952-ம் ஆண்டு ஆகஸ்ட் 29-ம் நாள் இவ்வுலக வாழ்வில் மறைந்து விண்ணுலகில் பிறந்தார். ‘இறந்தாலும் மறக்க மாட்டேன்’ என்னும்

அவரின் வாக்குகள் இன்றும் நமது இதயங்களில் மாறாத அலை ஓசைகளாக வலம் வருகின்றன.

**குடும்ப இறைப்பணியில் எவுப்பிராசியம்மா**

நாம் எங்கே சென்றாலும், யாரைக்கண்டாலும் அவர்களிலெல்லாம் இறைமுகம் தேடிடல் வேண்டும் இதுவன்றோ இறைத்தொண்டு. எவுப்பிராசியம்மாவின் வாழ்வு தனது உடல்நலக்குறைவால் மக்களிடையே சென்று அவர்களுக்கு பணிவிடை செய்ய முடியா நிலையிலும், அன்னை அவர்களின் ஜெபத்தின் வல்லமையை சுற்றுமுள்ள மக்களினத்தார் அறிந்திருந்தனர். மற்றவர்களின் இதய உணர்வுகளை தனது ஞானக்கண்களால் தெரிந்துகொள்ள தனிவல்லமை பெற்றிருந்த அன்னை, தன்னை நாடி வந்தவர்களின் துயரத்தின் ஆழ்நிலையை அறிந்திருந்தார். அவர்கள் மனம் திறந்து கூறாத துக்கங்களைக் கூட கண்டெடுத்து அவர்களுக்கு ஆறுதல் அளித்தார். அவ்வாறு ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கும், ஒரு குடும்பத்திலிருந்து மற்ற குடும்பங்களுக்கும் என சங்கிலி தொடர்பு போன்று நீளமான ஜெபத்தின் வல்லமையுடன் இணைக்கப்பட்ட மறைப்பரப்பு பணியை தனது வாழ்க்கை முறையாக கொண்டிருந்தார். அன்னையின் அரவணைப்பால் மலை போன்ற துயரங்கள் பனி போல கரைந்து போயின.

உண்மையுடன் வாழ்ந்திடு, பயனற்ற கள்ளமும் கபடமும் அறவே ஒழித்திடு, இறைவன் உங்களை ஆசீவதித்திடுவார், நன்றாக ஜெபித்திடு, கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்பவை அன்னையின் அமுத மொழிகளாகும். அன்னை சொல்லிக் கொடுத்த ஜெபங்களை ஜெபித்த ஏராளமானோர் இறை ஆசீரையும், ஆறுதலையும், சிக்கல்களிலிருந்து விடுதலையும் பெற்றுக் கொண்டதாக சான்று அளித்துள்ளனர்.

சொத்துவழக்குகள், குடும்ப அமைதியின்மை, குழந்தைபேறுயின்மை, திருமணத்தடை போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காண அன்னையை தேடி வந்தவர்களுக்கு சிறுசிறு ஜெபங்களும், மன வலிமை ஜெபங்களும் தன் கரத்தால் எழுதிக்கொடுத்து குறிப்பிட்ட தினங்கள் தொடர்ந்து ஜெபித்தால் சரியாகிவிடும் என்ற உறுதியை அவர்களுக்கு கொடுத்தார். மரணத் தருவாயில் இருப்போர் நல் மரணமடைய தயார்படுத்துவதும், ஆறுதல் அளிப்பதும் அவருடன் இணைந்து ஜெபிப்பதும் அன்னையின் தனிப் பண்புகளாகும். தனது குடும்பம் எல்லாம் இழந்து வறுமையில் வாடி தன்னைத் தேடி வந்த சகோதரனிடம், 'சொத்துக்கள் அழிந்தாலும் பணத்தில் குறைந்தாலும் புனித வாழ்வு குறையாது' என்றார்.

அன்னையின் ஆக்கப்பூர்வமான அரவணைப்பும், கருணைமிகு ஆறுதலையும் மக்களுக்கு காட்டி, ஜெபமும் செயலும் ஒன்றிணைந்த வாழ்க்கை முறைக்கு முன்னோடியாகவும் குடும்பங்களின் நல்லாலோசகராகவும் திகழ்ந்தவர் புனித எவுப்பிராசியம்மா. குடும்பங்கள் நல்லுறவில் இறை ஆசியுடன் வாழ அவர் வழி இறைவனை வேண்டுவோம்.

**மார் ஜார்ஜ் இராஜேந்திரன்**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

(இச்சுற்றுமடலை இம் மாதம் 21 - ம் தியதி திருப்பலிக்கு பின் வாசிக்கவும்)